# பெரியபுராணத்தில் அப்பூதியடிகளின் இறைநெறி

# Periyapuranathil Apoothadigalin Iraineri

***முனைவர் அ. அப்சர்***
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
புதுக்கல்லூரி, சென்னை

**Dr. A. Apser**
*Assistant Professor, Department of Tamil*
*New College, Chennai*

**ஆய்வுச் சுருக்கம்**

*பெரியபுராணம் எனும் செழுந்தமிழ் இலக்கியத்தை சமயக் கண்கொண்டு மட்டும் பார்க்காமல் வரலாற்றுக் கண்கொண்டும் பார்ப்பது தமிழறிஞர்களின் இயல்பு. சேக்கிழார், தமது நூலுக்குப் பெரியபுராணம் என்று பெயர் சூட்டவில்லை. பெரியார் வரலாற்றைக் கூறுவதாலும், ஓதுவோர்க்குப் பேசரிய பெருமை சேர்ப்பதாலும் பிறவாயாக்கைப் பெரியோன் பெருமையை எடுத்து விளக்குவதாலும் சைவம் பேசும் இதனையொத்த பெருநூல் இதற்கு முன்னும் பின்னும் தோன்றாமையாலும் இந்நூல், பெரியபுராணம் என்று பாராட்டப்படுகின்றது.*

*தமிழில் புராணங்களில் பலவுண்டு, அவற்றுல் சிறப்புள்ளனவும் உண்டு சிறப்பு இல்லனவும் உண்டு. ஆனால் அந்த வரிசையில் பெரியபுராணம் புனைந்து ரைக்கப்பட்டதன்று. அதுவொரு வரலாற்று நூல். வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர்களின் சரித நூல். பக்திச்சுவை பயக்கும் பெருநூல். இன்பஅன்பினை இடையராது, விளைவிக்கும் தமிழ் மறைநூல். தமிழ்மொழியின் இசைநுணுக்கங்களையும் மெய்யறிவையும் கொண்டு இலங்கும் முழுமுதல் நூலாகும்.*

***முக்கியச் சொற்கள்:***
*பெரியபுராணம், இறைநெறி, சேக்கிழார், புறவழிபாடு, அகவழிபாடு*

**Abstract**

*It is the nature of Tamil scholars to look at the Chelunthamil literature called Periyapuranam not only from a religious point of view but also from a historical point of view. The Sheikhizhar did not name his book Periyapuranam. The book is hailed as a great myth because it tells the story of elders, adds pride to the Othuvar's speech, and explains elder's pride, and does not appear to be a similar vegan epic.*

*There are many Puranas in Tamil and some of them are special . There is nothing special. But in that order the great myth is fictionalized. It is a historical book. A book of biographies of survivors. Devotional epic. The Tamil epic book that yields uninterrupted love is the complete book with the musical nuances and wisdom of the Tamil language*

***Keywords:***
*Periyapuranam, Iraineri, Sheikhizhar, Puravazhipadu, Agavazhipadu*

**Citation**

Apser, A. "Periyapuranathil Apoothadigalin Iraineri." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 73–77.

| | |
|---|---|
| CC BY SA | *https://doi.org/10.5281/zenodo.20136360* |

**வழிபாடு**

*வழிபடு எனும் சொல்லே வழிபாடு ஆனது இ வழிபடுதல் என்பதற்கு பின்பற்றுதல் அல்லது வணங்குதல் என்று பொருல் கொள்ளலாம். வழிபாடு என்பது வெறும் சடங்குகளையோ, செய்கைகளையோ, செயல்பாடுகளையோ மட்டும் கொண்டதன்று. அஃது ஓர் உயிரியல் முயற்சி, உயிரானது உயர்நிலை எய்திடும் பெரும் முயற்சி அவன் அருளால் அவனை அடையும் பெரும்முயற்சி ஆகும். அச்சம், அன்பு, அருள் என்ற மூன்று உணர்வு நிலைகளே வழிபாடு தோன்றுவதற்குரிய காரணம் ஆகும்.*

**புறவழிபாட்டின் சிறப்பு**

*பக்தியின் வாயிற்படி புறவழிபாடு, இதன் வளர்ச்சி நிலையே அகவழிபாடாக மாறுகிறது. புறவழிபாட்டின் சிறப்பிற்குப் ''பெரியபுராண அடியார்கள்'' மிகச்சான்றாக விளங்குகின்றனர். சான்றாகக் கண்ணப்ப நாயனார், சாக்கிய நாயனார், மூர்க்கர் போன்றோர் புறவழிபாட்டின் மூலம் முக்தி பெற்று இறைவனைச் சேர்ந்தவர்கள்.*

**அகவழிபாடு**

*உள்ளத்தில் இறைவனை இருத்தி ஒருமையுடன் அவனது திருவடிகளை நினைத்து போற்றுவது அகவழிபாடு திருவள்ளுவர், ''பற்றுக பற்று அற்றான பற்றினை'' / என்ற குறள் மூலமாக உணர்த்துகின்றார். இறைவனை உள்ளத்தால் நினைத்து வழிபடுவது அகவழிபாடு அடியார் தம் மனத்தை கோயில்களாக் கொள்பவர் இறைவன், ''மாணடி சேர்ந்தலர்'' என்ற வள்ளுவர் தம் குறள் தொடர்க்கு இறைவனை இடைவிடாது நினைத்தல் என்று பரிமேலழகர் விளக்கம் தருகின்றார். எந்த ஒரு உருவத்தையும் வெளியில் வைத்து வணங்கலாம். உள்ளத்திலே வைத்து வணங்காமல் உள்ளத்திலே வைத்து வழிபடுதல் வேண்டும். இச்சொல் எல்லோராலும் பின்பற்றக்கூடியதன்று. திருமூலர்,*

***''உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்***
***வள்ளல் பிரானார்க்கு வாய்சேர புரவாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்***
***கள்ள புலனைந்தும் காளா மணிவிள்க்கே''[2]***

*எனும் திருமந்திரப் பாடலின் வழி விளக்குகிறார். இப்பாடற்கண்இ உடம்பை ஆலயமாகவும் வாயினைக் கோபுர வாசலாகவும் சீவனாகிய சிவலிங்கமாகவும் ஐம்புலனின் துணையே விளக்காகவும் உருவகப்படுத்தித் திருமூலர் கூறுவது நோக்கத்தக்கது. மேலும்,*

***''தேயமும் நாடும் திரிந்த எங்கள் செல்வனை***
***காயமன் நாட்டிடை கண்டு கொண்டேனே''[3]***

*என்று இறைவனைத் தன்னுள் தேடிக்கொண்டதாக க.சாமிநாதன் கூறுகினடறார்.*

**அப்புதியடிகளின் வழிபாடு**

*அப்புதியடிகள் திருநாவுக்கரசரை தன் குருவாக வழிபட்டார். அவர்தம் வாழ்நாள் முழுவதும் திருநாவுக்கரசர் திருப்பெயரையே ஏத்திப் போற்றினார். அவர் திருவடிகளே எல்லாப் பொருளாகக் கொண்டு போற்றினார். அங்ஙனம் போற்றுதலையே தான் பெற்ற பேராகக் கொண்டார். திருநாவுக்கரசரைக் காணாத நிலையில் அவரது அருட்செயல்களைக் கேட்ட நிலையிலேயே அவர் மீது மாறாத பேரன்பு புண்டவர். இவர் தனது மனையிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் நாவுக்கரசரின் பெயரையே இட்டு வழங்கி வந்தார்.*

*உலகியலில் குழந்தைகளுக்கு இறைவனின் பெயரிடுவது. அவ்விறைவனின் நாமங்களைத் திரும்பத் திரும்பக் கூற ஏதுவாகும் என்ற காரணம் பற்றியதாகும். அஃது இறைவன் அருளால் அக்குழந்தை நலம் பெற்று வாழும் எனக் கருதியுமே ஆகும். அவ்வாறு அப்புதியடிகளும் குருவின் பெயருடன் தனது பெயரை உச்சரிப்பதன் மூலம் அவரை நினைத்துக் கொண்டே இருக்கலாம் எனக் கருதினார். சிவனடியாரை சிவனாகவே கருதிய சிறப்புக்குரியவர்களில் முதன்மைப் பெற்றுத் திகழ்பவர் அப்புதியடிகளே ஆவர்.*

**அப்புதியடிகளின் பக்திநெறி**

*அப்பரின் அருட்செயல்களைக் கேட்டு அவரைக் காணாமலே அவர் மேல் பக்தி கொண்டார், அப்புதியடிகள். யாதொரு பயனும் கருதாது நாவுக்கரசரை வழிபட்டவர் நாவுக்கரசரின் திருவடியினையே தமக்குரிய ஊதியமாகக் கருதியவர். தம் இல்லத்திற்கு எழுந்தருளிய அப்பரை வழிபட்டு அவருக்குத் திருவமுது படைக்க முற்பட்டார். அப்பொழுது வாழை இலை கொய்யச் சென்ற தமது மகனை அரவு தீண்டி மாய்ந்து போக அது தெரிந்தால் தமது குருவான அப்பர் அமுதுண்ணாமல் செல்லக்கூடும் எனக் கருதி அதனை தெரிவிக்காமல் வழிபாடாற்றியவர். இது அவருடைய அதி தீவிரமான குருபக்தி முதிர்ச்சியைக் காட்டுவதாகும்.*

*இவர் திருநாவுக்கரசர் எனும் நாமத்தை யாண்டும், தீட்டியும், உயிர்க்குறுதி பயக்கும் மந்திரமாக உச்சரித்தும் வாழ்ந்து முக்திப் பேற்றை அடைந்தவர். "இவ்வகை அரசின் நாமம் ஏத்தி எப்பொருளும் நாளும்", அவ்வருந்தவர் பெற்றாளே எனவுணர்ந்தடைவார்"[4] எனும் பாடலடிகள் இதனை விளக்கும். "அன்பால் என்றும் செப்பு ஊதியம் கைக்கொண்டார் திருநாவுக்கரசர் பாதம்"[5] எனும் அடிகள் திருநாவுக்கரசரைக் குருவாக ஏற்று வாழ்ந்ததைத் தெரிவிப்பவையாகும்.*

**அப்புதியடிகளின் பக்தி சிறப்பு**

*திருநாவுக்கரசரை ஒருமுறைகூட காணாமலே அவர் மீது அளவற்றப் பக்தி கொண்டு வாழ்ந்தவர் அப்புதியார். பக்தி கொள்வதற்கு எந்தவொரு அறிமுகமும், ஒரே இனமாக இருக்க வேண்டும் என்பது எதுவும் வேண்டாம் என்பதை அப்புதியடிகளின் மூலம் அறியலாம்.*

***"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்***
***நட்பாம் கிழமை தரும்"[6]***

*எனும் திருக்குறள் நெறியில் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் நட்பு கொண்டதை சங்க இலக்கிய வரலாற்றில் அறிவோம். அவ்வண்ணமே அப்புதியடிகளார் திருநாவுக்கரசரை ஒருமுறையும் காணாமலே அவர்மீது பக்தி கொண்டு வாழ்ந்தவர்கள் என்பதை அறியலாம்.*

*அப்புதியடிகளாரும், திருநாவுக்கரசரும் ஒருதேயத்தாரும் இல்லை. ஒரு தடவைகூடப் பார்க்காதவர்இ திருநாவுக்கரசருக்கு இறைவன் செய்த அருளைக் கேட்டாலும் அப்புதியடிகள் நட்பாம் உரிமையை உடையவர்கள் ஆயினார்.*

**அப்புதியடிகளின் வாழ்க்கையின் மூலம் அறியப்படும் செய்தி**

*ஒருவரைக் குருவாகஇ வழிகாட்டியாகக் கொண்டால் அவரை நேரில் பார்ப்பதையும் காண அவர் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி நாம் வாழவேண்டும் என்பதற்கு அப்புதியடிகள்*

*வாழ்க்கை எடுத்துக்காட்டாகிறது. இறைவன் குருவாக எழுந்தருளியிருந்த மரத்தின் கீழ் அமர்ந்து மணிவாசகரை ஆட்கொண்டார். திருநாவுக்கரசர் அப்புதியடியாரைத் தேடி வந்து ஆட்கொண்டார். அருட்பிரகாச வள்ளலார் தம் ஆன்மாவினுள் குடி கொண்டிருந்த அருட்பெருஞ்ஜோதியை அறிந்து. அதனுள். கலந்து அத்தெய்வீகக் காட்சியால் ஆட்கொள்ளப்பெற்றார்.*

*அப்புதியடிகள் பக்திநெறி குறித்துக் கூறப்பட்டுள்ள இக்கட்டுரையில்இ அவர் குருவழிப்பாட்டினை மேற்கொண்டவர் என்பதும் தன்குருவான திருநாவுக்கரசர் மீது எல்லையற்ற பக்தி கொண்டு அவரது வழியிலேயே தாமும் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்இ மடங்கள் கட்டுதல்இ சாலை வசதி ஏற்படுத்துதல் போன்ற தொண்டுகளைச் செய்து முக்தி அடைந்தவர் என்பதும் இதன்வழிப் பெறப்படுகிறது.*

*அந்தணர்குலத்தில் தோன்றிய அப்புதியடிகள் அதே காலத்தில் வாழ்ந்த அந்தணராகிய திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொள்ளாமல் திருநாவுக்கரசரைக் குருவாக கொண்டமைக்குக் காரணம் திருநாவுக்கரசரது தொண்டு நெறியின் மீது அவர் வைத்திருந்தப் பற்றே என்பதை அறியலாம்.*

*ஒருவரைக் குருவாகக் கொள்வதற்கு அவரை நேரில் பார்க்கவேண்டுவதில்லை. அவர்தம் வாழ்க்கை நெறியைக் கைக்கொண்டு ஒழுகினாலே போதும் என்பதற்கு அப்புதியடிகளது வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.*

**குறிப்புகள்**

1. *குறள் - 350*
2. *க.சாமிநாதன். திருமந்திரம் மூவாயிரத்தில் முந்நூறு. பா - 160. ப - 83*
3. *மேலது. பா - 286. ப - 157*
4. *புலவர் வ. ஞானப்பிரகாசம். சேக்கிழார் காட்டும் திருத்தொண்டு நெறி*
5. *புலவர் வ. மாணிக்கனார். அப்புதியடிகள் புராணம். தொகுதி - 3. ப - 1826*
6. *குறள் - 785*

## References


1. *Kural - 350*
2. *Saminathan, K., Thirumanthiram Moovayirathu Munooru, Padal.160, P.83.*
3. *Puluvar V.Ganaprakasam, Sheikhizhar Kattum Thiruthondu Neri.*
4. *Puluvar V. Manikanar, Apoothadigal Puranam, Volume, 3. P.1826.*